
**பிப்ரவரி – 12**

# TNPSC துளிகள்

- இந்தியத் தேர்தல் ஆணையம் ஆனது இந்திய ஆட்சிப் பணி அதிகாரி சங்கர் லால் குமாவத்தை தமிழகத்தில் கூடுதல் தலைமை தேர்தல் அதிகாரியாக நியமித்துள்ளது.
- மக்களவையானது 2024 ஆம் ஆண்டு நிதி மசோதாவினை நிறைவேற்றியதன் மூலம் 2024-25 ஆம் ஆண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையினை நிறைவேற்றச் செய்வதற்கான செயல்முறையினை நிறைவு செய்தது.
- மாற்றுத் திறனாளிகளுக்கான அதிகாரமளிப்புத் துறையானது (திவ்யாங்ஜன்) திரிபுராவின் அகர்தலா நகரில் 2024 ஆம் ஆண்டு திவ்ய கலா மேளாவினை ஏற்பாடு செய்துள்ளது.
- டெல்லியில் பெண்களுக்கு வழங்கப்படுவது போல் மூன்றாம் பாலினத்தவருக்கும் பேருந்து சேவை இலவசமாக வழங்கப்படும் என்று டெல்லி அரசு அறிவித்துள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## கரியாச்சல்லி தீவுகள் மீட்பு திட்டம்




- தமிழ்நாடு கடலோர மீட்புப் பணியின் ஒரு பகுதியாக கரியாச்சல்லி பகுதியை மீட்பதற்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.
- 16 ஹெக்டேர் பரப்பளவில் இருந்த இத்தீவு ஆனது தற்போது 5.97 ஹெக்டேராக குறைந்துள்ளது.
- எந்தவொரு நடவடிக்கையும் இல்லாமல் இருந்தால், கரியாச்சல்லி மற்றும் கசுவாரி தீவுகள் ஆகிய இரண்டும் 2035 ஆம் ஆண்டில் கடலில் மூழ்கும்.
- மன்னார் வளைகுடாவானது, 21 தாழ்வான மக்கள் வசிக்காத பவளப்பாறைத்

தீவுகளின் தொடர் சங்கிலி அமைப்பினைக் கொண்டுள்ளது.

- இதுவரை 4,300 வகையான தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் இங்கு காணப் படுவதாக பதிவு செய்யப் பட்டுள்ளன.
- அவற்றில் 132 பவளப்பாறைகள் இனங்கள் ஆகும்.
- தமிழ்நாடு அரசானது, ஏற்கனவே 10,000 செயற்கை பவளப்பாறைத் தொகுதிகளை நிறுவியதன் மூலம் வான் தீவு என்ற தீவைக் காத்துள்ளது.

# தேசியச் செய்திகள்

## பழங்குடியினர் விவகாரங்கள் திருத்த மசோதாக்கள் 2024



BOOST FOR VULNERABLE GROUPS

- 4 of 13 PVTGs in state – Pauri Bhuyan, Chuktia Bhunjia, Bondo and Mankidia – who did not find place in the ST list, will be included now. The rest 9 groups are already in the ST list
- As per the Bill, Muka Dora, Mooka Dora, Nuka Dora, Nooka Dora in Koraput, Nabarangapur, Rayagada and Malkangiri districts will be declared the 63rd community in the state ST list
- Konda Reddy, Konda Reddi will form a separate 64th community in the ST list
- Tamadia and Tamudia, listed as SCs, will be shifted to the ST list. They will be considered a sub-group of Bhumij


- மாநிலங்களவையானது அரசியலமைப்பு (பட்டியலிடப்பட்ட பழங்குடியினர்) ஆணை திருத்த மசோதா, 2024 மற்றும் அரசியலமைப்பு (பட்டியலிடப்பட்ட சாதியினர் மற்றும் பழங்குடியினர்) ஆணை திருத்த மசோதா, 2024 ஆகியவற்றை நிறைவேற்றியுள்ளது.
- ஒடிசாவின் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் பட்டியலில் பல புதிய சமூகங்களைச் சேர்ப்பதற்கான வழிமுறையை இது தெளிவுபடுத்துகிறது.
- ஆந்திரப் பிரதேசம் மற்றும் ஒடிசா ஆகிய இரு மாநிலங்களின் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் பட்டியலில் தற்போதுள்ள பழங்குடியினரின் ஒத்த (இணை பொருள்) சொற்கள் மற்றும் ஒலிப்பு மாறுபாடுகளைச் சேர்ப்பதற்கும் இது உதவுகிறது.
- இந்தக் கூடுதல் சேர்க்கையில் ஒடிசாவில் நான்கு மற்றும் ஆந்திரப் பிரதேசத்தில் மூன்று என ஏழு எளிதில் பாதிக்கப்படக் கூடிய பழங்குடியினர் குழுக்கள் (PVTG - (பட்டியலிடப்பட்ட பழங்குடியினரின் உட்பிரிவு) சேர்க்கப்பட்டுள்ளன.
- ஒடிசாவின் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள PVTG சமூகங்கள்
  - புயான் பழங்குடியினக் குழுவிற்கு இணையான சொற்களாக பௌரி புயான் மற்றும் பௌடி புயான்;
  - புன்ஜியா பழங்குடியினருக்கு இணையான சொல்லாக சுக்டியா புஞ்சியா;
  - போண்டோ போராஜா பழங்குடியினரின் உட்பிரிவாக போண்டோ; மற்றும்

- மன்கிர்டியா பழங்குடியினருக்கு இணையான சொல்லாக மன்கிடியா.

❖ ஆந்திரப் பிரதேசத்தின் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள PVTG சமூகங்கள்

- போர்ஜா பழங்குடியினருக்கு இணையான சொற்களாக போண்டோ போர்ஜா மற்றும் கோண்ட் போர்ஜா;
- சவராஸ் பழங்குடியினருக்கு இணையான சொல்லாக கொண்டா சவராஸ்.

## எஃகுத் தொழில் துறையில் பசுமை ஹைட்ரஜன் குறித்தப் பயன்பாட்டிற்கான வழிகாட்டுதல்கள்




❖ எஃகுத் தொழில் துறையில் பசுமை ஹைட்ரஜனை பயன்படுத்துவதற்கான சோதனை திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான திட்ட வழிகாட்டுதல்கள் என்ற தலைப்பிலான இந்த வழிகாட்டுதல்கள் வெளியிடப் பட்டுள்ளன.

❖ புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் (MNRE) ஆனது எஃகுத் தொழில் துறையில் சோதனைத் திட்டங்களைச் செயல்படுத்த உள்ளது.

❖ இது புதைபடிவ எரிபொருள்கள் மற்றும் புதைபடிவ எரிபொருள் சார்ந்த உள்ளீடுகளுக்கு மாற்றாக பசுமை ஹைட்ரஜன் மற்றும் அதன் விளைபொருட்களைப் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ இந்த சோதனைத் திட்டங்கள் ஆனது, எஃகு அமைச்சகம் மற்றும் இந்தத் திட்டத்தின் கீழ் பரிந்துரைக்கப் பட்ட அமலாக்க முகமைகள் மூலம் செயல்படுத்தப்படும்.

❖ எஃகுத் தொழில் துறையில் மேற்கொள்ளப்பட உள்ள சோதனைத் திட்டங்களுக்கு உந்துதலாக விளங்கும் பகுதிகளாக மூன்று பிரிவுகள் அடையாளம் காணப் பட்டு உள்ளன.

❖ அவை


- இரும்புத் தயாரிப்பில் மேற்கொள்ளப்படும் நேரடி ஆக்சிஜன் குறைப்பு செயல்பாட்டில் ஹைட்ரஜனைப் பயன்படுத்துதல்;
- ஊது உலையில் ஹைட்ரஜனைப் பயன்படுத்துதல்; மற்றும்

❖ புதை படிம எரிபொருட்களுக்குப் பதிலாகப் பசுமை ஹைட்ரஜனைப் படிப்படியாக பயன்படுத்துதல்.

- இரும்பு மற்றும் எஃகு உற்பத்தியில் வெளியாகும் கார்பன் உமிழ்வைக் குறைக்கச் செய்வதற்காக ஹைட்ரஜன் சார்ந்த வேறு ஏதேனும் ஒரு புதுமையான பயன்பாட்டை உள்ளடக்கிய சோதனைத் திட்டங்களை மேற்கொள்ளவும் இந்தத் திட்டம் உதவும்.

# சர்வதேசச் செய்திகள்

## இந்தோ-மியான்மர் எல்லையில் தடுப்பு வேலி




- இந்தியா மியான்மர் நாடுகளுக்கு இடையேயான 1,643 கி.மீ. நீள எல்லை முழுவதும் வேலி அமைத்து அதனருகில் ஒரு ரோந்துப் பாதையை அமைக்க உள்ளது.
- மொத்த எல்லை நீளத்தில், மணிப்பூரின் மோரே என்னுமிடத்தில் 10 கி.மீ. நீள பகுதியில் ஏற்கனவே வேலி அமைக்கப்பட்டுள்ளது.
- மேலும், கலப்பு முறைக் கண்காணிப்பு அமைப்பு மூலம் வேலி அமைக்கும் இரண்டு சோதனை திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.
- அருணாச்சலப் பிரதேசம் மற்றும் மணிப்பூர் ஆகிய மாநிலங்கள் ஒவ்வொன்றிலும் 1 கி.மீ. நீளத்திற்கு வேலி அமைக்கப்படும்.
- மேலும், மணிப்பூரில் தோராயமாக 20 கி.மீ தூரத்திற்கு வேலி அமைக்கவும் ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது.
- இந்தியா மற்றும் மியான்மர் ஆகியவை வேலி இல்லாத எல்லையைப் பகிர்ந்து கொள்கின்றன.
- இருபுறமும் உள்ள மக்கள் குடும்ப மற்றும் இனம் சார்ந்த உறவுகளைக் கொண்டு ள்ள நிலையில், இது 1970 ஆம் ஆண்டுகளில் சில நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தூண்டியது.
- தடையற்ற நடமாட்ட (இடம் பெயர்வு) பகுதி (FMR) வசதி இந்தியாவால் சமீபத்தில் ரத்து செய்யப்பட்டது.

# பொருளாதாரச் செய்திகள்

## மாநில அரசுகளின் கடன் பெறுவதற்கான உத்தரவாதங்கள் குறித்த வழிகாட்டுதல்கள்

- இந்திய ரிசர்வ் வங்கியால் அமைக்கப்பட்ட ஒரு பணிக்குழுவானது, மாநில அரசுகளால் வழங்கப்பட்ட உத்தரவாதங்கள் தொடர்பான சிக்கல்களைத் தீர்க்க சில

பரிந்துரைகளை வழங்கியுள்ளது.

- ❖ இது நீட்டிக்கப்பட்ட உத்தரவாதங்களுக்கு (மாநில அரசுகளால்) ஒரே மாதிரியான அறிக்கையிடல் கட்டமைப்பையும், ஒரே மாதிரியான உத்தரவாத உச்சவரம்பையும் பரிந்துரைத்துள்ளது.
- ❖ இந்திய ரிசர்வ் வங்கியின் கூற்றுப்படி, இதன் செயலாக்கமானது "மாநில அரசுகளின் சிறந்த நிதி மேலாண்மையை மேம்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது".
- ❖ ஒரு 'உத்தரவாதம்' என்பது ஒரு மாநில அரசானது பணம் செலுத்துவதற்கும், முதலீட்டாளர்/கடன் வழங்குபவரைக் கடனாளி கடனைத் திருப்பிச் செலுத்ததால் ஏற்படும் அபாயத்திலிருந்து பாதுகாப்பதற்குமான ஒரு சட்டப்பூர்வக் கடமையாகும்.
- ❖ இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் (1872) படி, இது "ஒரு மூன்றாம் தரப்பினர் கடனைத் திரும்பிச் செலுத்தாமல் தவறினால் அந்த உறுதிமொழியை நிறைவேற்றுவது அல்லது கடன் பொறுப்பினை பூர்த்தி செய்தல்" என்ற ஒப்பந்தமாகும்.
- ❖ முதன்மையாக, மாநில அளவில் மூன்று சூழ்நிலைகளில் உத்தரவாதங்கள் பயன்படுத்தப்படுகின்றன:
  - ○ முதலாவதாக, இருதரப்பு அல்லது பலதரப்பு நிறுவனங்களிடமிருந்துப் பெறப்படும் (பொதுத் துறை நிறுவனங்களுக்கு) சலுகைக் கடன்களுக்கு இறையாண்மை உத்தரவாதம் முன்நிபந்தனையாக இருக்கும்;
  - ○ இரண்டாவதாக, முக்கியமான சமூக மற்றும் பொருளாதார நலன்களை வழங்கச் செய்வதற்கான சாத்தியக் கூறுகள் கொண்ட பல்வேறு திட்டங்கள் அல்லது செயல்பாடுகளின் நம்பகத் தன்மையை மேம்படுத்துதல்; மற்றும்
  - ○ கடைசியாக, பொதுத் துறை நிறுவனங்களுக்குக் குறைந்த வட்டிக் கட்டணங்களில் அல்லது மிகவும் சாதகமான விதிமுறைகளில் நிதி வளங்களைத் திரட்டுவதற்கும் பயன்படுத்தப் படுகின்றன.




Chart 3.1: Outstanding Guarantees (end-March) as per cent to GSDP


# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

## எதிர்கால நுட்ப வகையிலான வட்ட வடிவ மோதுவிக் கருவி

- ❖ CERN எனப்படும் ஐரோப்பிய அணு ஆராய்ச்சி அமைப்பானது மூன்று மடங்கு பெரிய (மற்றும் வேகமான) எதிர்கால நுட்ப வகையிலான வட்ட வடிவ மோதுவிக் கருவியை (FCC) உருவாக்க திட்டமிட்டுள்ளது.
- ❖ FCC என்பது 91-கிலோமீட்டர் வளையத்திற்குள் அமைந்த ஒரு துகள் முடுக்கி ஆகும் என்பதோடு இது ஒரு பெரிய ஹாட்ரான் மோதுவியை விட மூன்று மடங்கு சுற்றளவைக்


கொடுக்கும்.

- FCC ஆனது “2045 ஆம் ஆண்டின் முதல் பாதியில் செயல்படத் தொடங்கும்.
- 100 டெரா எலக்ட்ரான் வோல்ட்களின் மோதல் ஆற்றல்களை அடையும் நோக்கத்துடன், துகள் மோதல்களின் ஆற்றல் மற்றும் தீவிர வரம்புகளை அதிகரிப்பதே FCC என்றக் கட்டமைப்பின் குறிக்கோள் ஆகும்.




# மாநிலச் செய்திகள்

## உத்தரகாண்ட் பொது உரிமையியல் சட்ட மசோதா




- பொது உரிமையியல் சட்ட (UCC) மசோதாவை நிறைவேற்றிய முதல் மாநிலமாக உத்தரகாண்ட் மாறியுள்ளது.
- UCC என்பது திருமணம், விவாகரத்து, பரம்பரைச் சொத்து உரிம மாற்றம் மற்றும் தத்தெடுப்பு மற்றும் பிற தனிப்பட்ட விவகாரங்கள் ஆகியவற்றைக் கையாள்வதில் பல்வேறு மதங்களின் அடிப்படையில் அமையாத, அனைத்து இந்திய குடிமக்களுக்கும் பொருந்தக் கூடிய பொதுவான சட்டங்களின் தொகுப்பைக் குறிக்கிறது.
- உத்தரகாண்ட் மாநிலத்தின் மக்கள்தொகையில் 3 சதவீதத்தைக் கொண்ட பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் மற்றும் மக்கள்தொகை கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் இந்த மசோதாவிலிருந்து விலக்கப்பட்டுள்ளன.
- மூதாதையர் சொத்துக்கும் சுயமாக வாங்கிய சொத்துக்கும் இடையிலான வேறுபாடு

இதில் நீக்கப்பட்டுள்ளது.

- உயில் எழுதி வைக்காத வாரிசு தொடர்பான சூழலில், குழந்தைகள், விதவை மற்றும் பெற்றோர் ஆகியோரை உள்ளடக்கிய வகுப்பு-1 வாரிசுகளுக்குச் சொத்துச் சேரும்.
- வகுப்பு-1 வகை வாரிசுகள் இல்லாத பட்சத்தில், உடன்பிறந்தவர்கள், மருமகள்கள், மருமகன்கள் மற்றும் தாத்தா பாட்டி ஆகியோரை உள்ளடக்கிய வகுப்பு-2 வகை வாரிசுகளுக்குச் சொத்து சேரும்.
- மூதாதையர் சொத்துக்களில் பெண்களுக்கு சம உரிமை, தத்தெடுப்பதில் சம உரிமை, விவாகரத்து போன்றவற்றை இந்த மசோதா கொண்டுள்ளது.
- இருதார மணம் அல்லது பலதார மணம் இந்தச் சட்டத்திற்கு புறம்பானது.
- இது திருமணம் செய்யாமல் இணைந்து வாழும் உறவுகளுக்கான கட்டாயப் பதிவு/சுய அறிவிப்பு, திருமணங்கள் மற்றும் விவாகரத்து ஆகியவற்றின் கட்டாயப் பதிவு ஆகியவற்றினையும் வழங்குகிறது.
- UCC ஆனது முஸ்லிம் பெண்கள் மற்றும் ஆண்களுக்காண குறைந்தபட்சத் திருமண வயதை முறையே 18 மற்றும் 21 ஆக அறிவிக்கிறது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★